அழகிய கலை நயம் மிக்க
புதுமையான
22 கரட் தங்க
நகைகளை
ஆடர் செய்து
பெற்றுக்கொள்ள
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்.
தொலைபேசி: 23628

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1/-

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

பெண்மைக்கு
மெருகேற்றும் இளமைக்கு
எழிலூட்டும் தரமான
தங்க நகைகளை
அளிப்பவர்கள்
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி,
யாழ்நகர்
தொலைபேசி: 23628

சுடர்: 1 யாழ்ப்பாணம் அக்ஷய வருடம் ஆடி மீ 14 உ. புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்கஃ பிறை 22 (30-07-1986) UTHAYAN 'A LIVELY TAMIL DAILY' ஒளி: 217

# தமிழர் கூட்டணி விடுத்த அழைப்பை புலிகள் ஏற்றனர்

## கொழும்புப் பேச்சு பெறுபேறுகளை திங்கள் சந்தித்துப் பரிசீலனை

சென்னை, ஜூலை 29

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுத்த அழைப்பைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஏற்றனர்.

கொழும்பில் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றிய பெறுபேறுகளைப் பரிசீலனை செய்ய வருமாறு கூட்டணியினர் விடுதலைப் போராளிகள் அமைப்புகளிடம் அழைப்பு விடுத்தனர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அழைப்பை ஏற்று நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) கூட்டணித் தலைவர்களைச் சந்தித்து மனம்விட்டுப் பேசினர்.

இது தமிழர் அமைப்புகளைப் பொறுத்த மட்டில் பெரும் திருப்பம் என்று இங்குள்ள அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டனர்.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் மூன்று அமைப்புகளான தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழப்புரட்சிகர அமைப்பு ஆகியன

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முனி



கள்ளக் கறண்ட் எடுக்கிறவனைப் பிடிக்கிற வேலை அப்ப பின்னை கறண்ட் வேலைக்கு இப்ப நடக்குது என்டு சொல்லுறியோ. அதுவும் நல்ல காரியம் தானே!

---

இனப்பிரச்சினை

## ஒருதலைப்பட்ச தீர்வு எதுவும் இருக்கக் கூடாது

### இந்திய லோகசபையில் இணை அமைச்சர் உரை

புதுடில்லி, ஜூலை 29

இனப்பிரச்சினைக்கு ஒரு தலைப்பட்சமான தீர்வு இருக்க முடியாது; இருக்கக் கூடாது

இரு தரப்பினரும் சமரச உடன்பாடு ஒன்று மூலமே தீர்வு காணவேண்டும்

இப்படி இணை அமைச்சர் திரு. கே. ஆர். நாராயணன் இந்திய லோகசபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இலங்கை அரசு – கூட்டணி பேச்சுக்கள் தொடங்கியுள்ள தருணத்தில் வன்செயல்கள் முழுவதும் தவிர்க்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர் பயங்கரமான முறையில் கொல்லப்படுவது குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது.

இப்படி இணை அமைச்சர் சொன்னார்.

(உ-எ)

சட்டவிரோத மின்சாரம்:

## தெல்லிப்பளை பகுதியில் 200 வீடுகள் முற்றுகை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தெல்லிப்பளைப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை பெற்று வந்த சுமார் 200க்கு மேற்பட்ட வீடுகள் நேற்றுக் காலை மின் அதிகாரிகள் குழு ஒன்றினால் முற்றுகையிடப்பட்டன.

மாவிட்டபுரம், கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை அம்பனை, துர்க்காபுரம் ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இந்த முற்றுகைக்கு தெல்லிப்பளைப் பகுதிக்குப் பொறுப்பான மின் அத்தியட்சகர் திரு. பொ. ஜெயரத்தினசிங்கம் தலைமை வகித்தார்.

இவ்வீடுகளுக்குச் சட்டவிரோத மின்சக்தியைப் பெறப் பயன்படுத்தப்பட்ட வயர்கள் அகற்றப்பட்டன.

பின்னர் அவ்வயர்கள் தெல்லிப்பளை தர்க்கை அம்மன் ஆலயத்துக்கு முன்னாலும் வைத்தல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## கன்டீன் உரிமையாளர் இருவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

பொருத்தப்பட்ட மின்சார மீட்டர் மூலம் மின்சாரத்தைப் பெறாமல், பிரதான மின்வயரில் இருந்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வந்த ஒரு கன்டீன் உரிமையாளரை மின்சார அத்தியட்சகர் திரு. பொ. ஜெயரத்தினசிங்கம் தலைமையிலான மின் அதிகாரிகள் குழு கையும் மெய்யுமாகப் பிடித்தது.

நேற்று தெல்லிப்பளையில் நடத்தப்பட்ட திடீர் சோதனையின்போது கன்டீன் உரிமையாளர் ஒருவர் அகப்பட்டுக்கொண்டார்.

அவருக்கு 2,000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதைவிட அபிவிருத்திச்சபை உப அலுவலகம் இச்செயலால் இழந்ததாக மதிப்பிட்ட வருமானமான 2,000 ரூபாவிற்கு அதிகமான பணமும் அவரிடம் இருந்து அந்த இடத்திலேயே வசூலிக்கப்பட்டது.

அபராதத்தையும் அவர் அந்த இடத்தில் வைத்தே அதிகாரிகளிடம் செலுத்தினார்.

இதற்கிடையில் மீட்

(4 ஆம் பக்கம் பார்க்க)

அரசு-கூட்டணிப் பேச்சு

## பிரதமரையும் தீவிரமாக பங்குபற்ற செய்வதற்கு முயற்சி

கொழும்பு, ஜூலை 30

ஆகஸ்டில் நடைபெறவுள்ள அரசு – கூட்டணி இரண்டாம் கட்டப் பேச்சுக்களில் பிரதமர் பிரேமதாஸாவையும் தீவிரமாக கலந்துகொள்ளச் செய்ய வேண்டும் என்று இல் அரசு வட்டாரங்கள் தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

அரசு - கூட்டணி முதற் கட்டப் பேச்சுக்கள் தொடங்குவதற்குச் சில தினங்களுக்கு முன்னர் பிரதமர் பிரேமதாஸ வெளிநாட்டுப் பயணத்தைத் தொடக்கினார்.

ஆகஸ்ட் 10ஆம் திகதி பிரதமர் தாயகம் திரும்புகிறார்.

இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக நடைபெறும் பேச்சுக்களில் பிரதமர் அவ்வளவாக அக்கறை காட்டுவது இல்லை; ஒதுங்கியிருந்து வருகிறார் என்ற அபிப்பிராயமே கொழும்பு அரசியல் வட்டாரங்களில் நிலவி வருகின்றது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் இறுதிக் கட்டத்தில் பிரதமரையும் தீவிரப் பங்கு ஏற்கச் செய்யவேண்டும் என்ற ஆர்வமும் அவர் இது வரை பங்கெடுக்காதது குறித்து கவலையும் அரசு வட்டாரங்களில் நிலவுகின்றது (உ-எ)

---

திங்கள் தாக்குதலில்

## யாழ் கோட்டை முகாமின் உயர் அதிகாரி உட்பட 2 பேர் பலி!

கொழும்பு, ஜூலை 30

திங்கட்கிழமை நடந்த போராளிகளின் தாக்குதலில் யாழ் கோட்டை இராணுவ முகாமின் 'மெஸ்' ஸினுள் இருந்த லெப்டினன்ட் கேர்ணல் ஒருவரும் சிப்பாய் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

கப்டன் ஒருவரும் மேஜர் ஒருவரும் காயமடைந்தனர்.

உயிரிழந்த இராணுவத்தினரின் பெயர்கள் வருமாறு;

1 லெப்டினன்ட் கேர்ணல் விக்கிரமநாயக

2 சிப்பாய் சேனவிரத்ன

போராளிகளினால் விடப்பட்ட மோட்டோர் ஷெல் ஒன்று இராணுவ 'மெஸ்' மீது விழுந்து வெடித்தது.

இப்படி பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (இ-எ)

## நள்ளிரவு நடந்த ஷெல் தாக்குதல் ஒருவர் பலியானார்!

யாழ்ப்பாணம், ஜூலை 30

திங்கட்கிழமை இரவு யாழ் கோட்டை முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லுக்கு ஒருவர் பலியானார். மேலும் ஒருவர் காயமடைந்தார்.

சம்பவம்பற்றிக் கூறப்படுவதாவது:-

கோட்டை முகாமில் இருந்து திங்கட்கிழமை மாலை மூன்று மணி முதல் அதிகாலை இரண்டு மணி வரை ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரியகுளம் விராண்டி வீதியில் மார்க்கண்டு என்பவரது வீட்டு வளவினுள் ஒரு ஷெல் விழுந்து வெடித்ததினால் இவரது மகனான, மார்க்கண்டு சந்திரதாசன், (33வயது) அந்த இடத்திலேயே மரணமானார்.

இவரது தகப்பனாரும் பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

மேலும் ஒரு ஷெல் இப்பகுதியில் உள்ள ஒரு வீட்டு வளவினுள் விழுந்து வெடித்ததினால் அங்கு நின்ற இரண்டு ஆடுகள் இறந்தன.

தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல் குண்டுகள் ஆரியகுளம், நாவாந்துறை, சத்திரத்துச்சந்தி, கொட்டடி போன்ற இடங்களில் விழுந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சிம்பாப்பே செல்கிறார்

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி ஜெயவர்த்தன ஆகஸ்ட் 31 இல் சிம்பாப்பே செல்கிறார்.

அங்கு நடைபெறும் அணிசேரா இயக்க நாட்டுகளின் மாநாட்டில் அவர் கலந்துகொள்வார்.

ஐந்து தினங்கள் வரை இம்மாநாடு நடைபெறும்.

சிம்பாப்பே தலைநகரான ஹராரேயில் இம்மாநாடு நடைபெறும். (இ-எ)

சுபநேரம்

30—07—1986

புதன்கிழமை

சுபநேரம்:

4-33 முதல் 6-03 வரை

ராகுகாலம்:

12 03 முதல் 1-33 வரை

இலை பசுகூடும் இரவுக்கும் பொருந்தும்

நவமி பிற்பகல் 2 58வரை

கார்த்திகை விரதம்

## உடல் சிதறிய நிலையில் இறந்து கிடந்தார்

யாழ்ப்பாணம் ஜூலை 30

வெடிச்சத்தம் கேட்ட போது வெளியில் ஓடிவந்து பார்த்தேன். அப்போது சந்திரதாசன் உடல் சிதறிய நிலையில் இறந்து கிடந்தார்.

திங்கட்கிழமை இரவு யாழ் கோட்டை முகாமிலிருந்து ஏவப்பட்ட ஷெல் தாக்குதலின் போது மரணமான மார்க்கண்டு சந்திரதாசனின் மரண விசாரணை நேற்று நடைபெற்றது

மரண விசாரணையை யாழ் நீதவான் திரு நாகராசா நடத்தினார்.

அப்போது சாட்சியமளித்த வேலுப்பிள்ளை கதிரமலை என்பவர் மேற்கண்டவாறு கூறினார்

சாட்சி மேலும் சொன்னதாவது:-

திங்கட்கிழமை இரவு நான் வீட்டினுள் படுத்திருந்தேன்.

அப்போது நள்ளிரவு 12 50 மணி இருக்கும் தொடர்ச்சியாக வெடிச்சத்தங்கள் கேட்டன

அப்பொழுது காலஞ்சென்றவரும் அவரது தகப்பனும் வீட்டுக்கு பின்னால் உள்ள இரண்டு ஓலைக்கொட்டிலில் தனித்தனியாகப் படுத்திருந்தனர்.

திடீரென வீட்டுப் பின் பக்கமாகப் பாரிய வெடிச்சத்தம் கேட்டது.

நான் ஓடிச் சென்று பின் பக்கமாகப் பார்த்தேன்.

அப்பொழுது காலஞ்சென்றவர் கொட்டிலிரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## டிக்ஸிற் டில்லி பயணமானார்

கொழும்பு ஜூலை 30

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் புதுடில்லி சென்றார்.

ஒரு வார காலம் புதுடில்லியில் தங்கி நின்று இலங்கை இனப்பிரச்சினை சம்பந்தமான பேச்சுக்களில் திரு டிக்ஸிற் கலந்து கொள்வார்.

இலங்கை அரசிடம் இருந்து ஏதாவது விளக்கங்களைக் கொண்டு செல்கிறீர்களா? — என்று கேட்டதற்கு 'இல்லை'' என்று திரு டிக்ஸிற்

(4ஆம் பக்கம் பார்க்க)

---

மாகாணசபை அமுலானால்....

## நாடு முழுவதும் உண்ணாவிரத இயக்கம் நடக்கும்

### மல்வத்தைப் பீடம் முடிவு

கொழும்பு ஜூலை 30

மாகாணசபைச் சட்ட மூலம் கொண்டு வரப்படுமேயானால் அதனை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவும், நாடு முழுவதும் உண்ணாவிரத இயக்கத்தை நடத்தவும் மல்வத்தைப் பீடம் முடிவு செய்துள்ளது.

இந்த முடிவு ஜனாதிபதிக்கு அறிவிக்கப்பட்டு விட்டது

இம் முடிவு எடுக்கப்பட்ட கூட்டத்திற்கு மல்வத்தைப் பீட அனுநாயக்க தேரர் ரஞ்சித் ரத்னபால தலைமை வகித்தார்.

இதே வேளை — மாகாணசபை யோசனைகளை எதிர்ப்பதாக மல்வத்தை பீடாதிபதி ஆனந்த மகாநாயக்க தேரரும் ஜனாதிபதிக்கு அறிவித்து விட்டார்

மாகாணசபை யோசனைகளை அமுல் நடத்துவதானால் பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும், அல்லது சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்—இப்படி மல்வத்தைப் பீடாதிபதி ஜனாதிபதியிடம் நேரடி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஈ. பி. ஆர். எல். எவ். தனித்தனி அறிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

திங்கட்கிழமை யாழ் கோட்டை முகாம் மீது நடத்தப்பட்ட தாக்குதல் தொடர்பாக நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளும், ஈ. பி. ஆர் எல். எவ் வும் தனித்தனியே அறிக்கை விடுத்தனர்

தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு:

திங்களன்று கோட்டை இராணுவ முகாமில் இருந்து பலமணி நேரமாக இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகமும், மோட்டர் தாக்குதலும் நிகழ்த்தியவண்ணம் இருந்தனர்

இதனை முறியடிக்கும் முகமாக எமது தரப்பினர் முகாம் நோக்கி மோட்டர் தாக்குதல் நிகழ்த்தியதில் இருவர் கொல்லப்பட்டதாகவும் 3 பேர் காயமடைந்ததாகவும் அரசாங்க அறிவித்திருந்தது.

காயமடைந்தோரில் முகாம் பொறுப்பதிகாரியும், ஒரு லெப்டினன்டும் அடங்குவர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈ. பி. ஆர் எல். எவ் விடுத்த அறிக்கை வருமாறு:-

28ஆம் திகதி கோட்டை இராணுவ முகாமில் இருந்து மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்கும் மோட்டர் ஷெல் தாக்குதலுக்கும் பதிலடிகொடுக்கு முகமாக மக்கள் விடுதலைப்படையினரால் கோட்டை முகாமை நோக்கி மோட்டர் ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டது.

மக்கள் விடுதலைப் படையின் மோட்டர் ஷெல் கோட்டை முகாமுக்குள் விழுந்து வெடித்ததில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஜீப் சிதைந்தது

### விமானப்படையினர் பலி

### விடுதலைப் புலிகள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

திருமலை மாவட்டத்தில் முதலாம் கண்டத்தில் புலிகள் நடத்திய கண்ணிவெடித் தாக்குதலில் ஜீப் ஒன்று முற்றாகச் சிதைந்தது. அதில் வந்த விமானப் படையினர் அனைவரும் கொல்லப்பட்டனர்.

இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

பன்குளம் இராணுவ முகாமில் இருந்து நேற்று மாலை 3 மணியளவில் இரண்டு ஜீப் வண்டிகளிலும், ஒரு டிரக்கிலுமாக சுமார் 50 விமானப்படையினர் மொறவெவ பொலிஸ், இராணுவ கூட்டு முகாமிற்கு சேர்ந்து செல்லும் சமயம் முதலாம் கண்டம் என்னுமிடத்தில் நாம் தரைக் கண்ணிவெடியை வெடிக்கச் செய்தோம்.

இந்தத் தாக்குதலின் போது எமது தரப்பில் எதுவிதமான இழப்புகளும் ஏற்படவில்லை

(உ)

மாகாணசபை சட்ட மூலம்

## ஆகஸ்ட் கடைசியில் நாடாளுமன்றத்தில்

கொழும்பு, ஜூலை 30

மாகாணசபைச் சட்ட மூலம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி ஆகஸ்ட் நடுப்பகுதியில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது.

ஆகஸ்ட் கடைசிவாரத்தில்தான் சட்ட மூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்றும், சமர்ப்பிக்கப்பட்ட பின்னர்தான் ஜனாதிபதி தனது சிம்பாப்வே பயணத்தை மேற்கொள்வார் என்றும் அரசு வட்டாரங்கள் கூறின

1987 ஜனவரியில் இருந்து மாகாண சபை முறையை நாட்டில் அமுலுக்குக் கொண்டு வருவதே அரசின் திட்டம் என்று தெரிகிறது

(உ-ஐ-உ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமற் போன மீனவர் இந்தியாவில் கரை சேர்ந்தனர்

நாவாந்துறை, ஜூலை 30

கடலில் மீன்பிடிக்கச் சென்று காணாமற்போன இரு மீனவர்கள் இந்தியாவில் கரைசேர்ந்ததாக உறவினர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

கடுத்துறை வாசிகளான ஆறுமுகம் கந்தசாமி (3 பிள்ளைகளின் தந்தை) திருச்செல்வம் பஞ்சலிங்கம் (2 பிள்ளைகளின் தந்தை) ஆகிய இருவருமே இருவாரங்களுக்கு முன்னர் மீன்பிடிக்கச் சென்றபோது காணாமற் போனவர்களாவர்.

இவர்களின் படகின் மோட்டார் இயந்திரம் பழுதடைந்து இவர்கள் கடலில் தத்தளித்த போது, இந்திய மீனவர்கள், இவர்களை இந்தியக் கரைக்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர் என்று தெரியவருகிறது. (இ-144)

# ஆயுத படையினரையும் உளவு அதிகாரிகளையும்

## வெளியேற்றக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழ்ப் பகுதிகளில் இருந்து ஆயுதப்படைகளையும் அவர்களுக்கு உதவியாக இயங்கும் வெளிநாட்டு உளவு ஸ்தாபனங்களின் அதிகாரிகளையும் உடனடியாக விலக்கிக் கொள்ளும்படி அரசாங்கத்தை யாழ் மாநகர வரியிறுப்பாளர் சங்கம் கேட்டுள்ளது.

அண்மையில் நடந்த சங்கப் பொதுக் கூட்டத்தில் இது சம்பந்தமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தலைவர் திரு க. செ. மகாதேவா தலைமைவகித்தார்.

நிறைவேற்றப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:

★ யாழ் நகரில் அதிகரித்துள்ள சட்டவிரோத மின்பாவனை, கட்டட நிர்மாணங்கள், நீர் பாவனை ஆகியவற்றைத் தடுத்து நிறுத்த ஆணையாளர் விசேட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

★ தமிழ் மக்கள் படுகொலைக்கு ஆளாவதை சங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது.

★ மாநகரசபையின் பழைய அலுவலகத்தில் மீண்டும் சபை அலுவல்கள் இடம் பெறுவது மக்களின் சிரமத்தைத் தீர்க்கும். இதற்கு உகவு முகமாக கோட்டையில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தினரை அகற்ற வேண்டும் என்று சங்கம் ஜனாதிபதியையும் பிரதமரையும் கேட்டுக் கொள்கிறது. (இ-எ)

### 15 ஆயிரம் மண்வெட்டிகள் தேவை

யாழ்ப்பாணம், ஜூலை 30

பதினைந்தாயிரம் மண்வெட்டிகளை இறக்குமதி செய்து தருமாறு அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்திடம் யாழ் மாவட்ட சமதன சேவை சிரேஷ்ட உதவி ஆணையாளர் திரு க. பரமலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அதேவேளை இம்மண்வெட்டிகளை இறக்குமதி செய்வதற்கு உரிய அனுமதியை அரச வர்த்தகக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்குமாறு யாழ் செயலகம் வர்த்தக அமைச்சிடம் வேண்டியுள்ளது. (உ-9)

## மயிலிட்டி வடக்கில்

# மீளவும் குடியேறிய விவசாயக் குடும்பங்கள் வெளியேற ஆரம்பம்

## சிப்பாய்கள் கெடுபிடி

காங்கேசன்துறை ஜூலை 30

மயிலிட்டி வடக்குப் பகுதியில் மீளவும் குடியேறிய விவசாயக் குடும்பங்கள் சிப்பாய்களின் நடமாட்டத்தாலும் ஹெலிகொப்டர் ரோந்தாலும் அச்சம் கொண்டுள்ளனர். சிலர் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர்.

மயிலிட்டி வடக்குப் பகுதியில் குறிப்பிட்ட ஒரு பகுதியில் வசித்து வந்த 125 விவசாயக் குடும்பங்கள் பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இடம் பெயர்ந்து சென்றிருந்தனர். அவர்கள் வீடு இன்றியும், விவசாயம் செய்ய காணி இன்றியும் கஷ்டநிலையில் இருந்து வந்தனர்.

அப்பொழுது அப்பகுதிக்கு நேரடியாக விஜயம் செய்த பிரிகேடியருக்கு அவர்கள் தம் பிரச்சினைகள் குறித்து விளக்கம் அளித்தனர்.

இதை அடுத்து விவசாயம் செய்யவும், குடியேறவும் விசேஷ 'பாஸ்' வழங்க இணக்கம் காணப்பட்டு பாஸ்கள் வழங்கப்பட்டிருந்தன.

இதன்பின் விவசாயக் குடும்பங்களில் ஒரு பகுதியினர் அப்பகுதியில் குடியேறி இருந்தனர்.

ஆனால் இராணுவ நடமாட்டம் அப்பகுதியில் தற்போது அதிகரித்துள்ளதாலும் ஹெலிகொப்டர் ரோந்து அதிகரித்துள்ளதாலும் அச்சம் கொண்ட இவர்கள் மீண்டும் அங்கிருந்து வெளியேற ஆரம்பித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

கடந்த 26 ஆம் திகதி சம்பவத்தின் போது சில விவசாயிகள் தாக்கப்பட்டனர் என்றும் சில வீடுகள் சேதம் ஆக்கப்பட்டன என்றும் கூறப்படுகிறது. (இ 68)

## மக்கள் முகம்

### திருக்குறள் ஐக்கிய நாணய சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் ஜூலை 30

யாழ்ப்பாணம் கந்தர்மடம் திருக்குறள் ஐக்கிய நாணய சங்கத்தின் புதிய நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர்: திரு ஏ. என். யோகராசா (பொறியியலாளர்)

உபதலைவர்: திரு என். யோகராசா

செயலாளர்: செல்வி மேகலா பொன்னுத்துரை

பொருளாளர்: டாக்டர் தி. பரமசிவம்

செயற்குழு உறுப்பினர்கள்: திரு க. அருளலிங்கம் திரு. க. கனகரத்தினம் திருமதி வே. சிவானந்தராசா. (இ-எ)

# கம்பன் விழா

## வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

அகில இலங்கை கம்பன் கழகம் நடத்தும் இவ்வாண்டுக்கான "கம்பன் விழா" அடுத்த மாத ஆரம்பத்தில் நடைபெறும்.

விழா நிகழ்ச்சிகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்திலும் நாவலர் கலாசார மண்டபத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் நடைபெற உள்ள இவ்விழாவில் பட்டிமன்றம், கவியரங்கம், கருத்தரங்கு, மேன்முறையீட்டுப் பட்டிமன்றம் என்பன இடம் பெறுகின்றன.

முதல் நாள் விழா ஆகஸ்ட் முதலாம் திகதி மாலை 4.30 மணிக்கு ஞானசம்பந்தர் ஆதீனத்தில் கலாநிதி பாலசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்.

இன்றைய சூழலில் எம்மவரை எழிபடுத்துவதில் முதன்மை பெறும் இலக்கியம் "இராமாயணமா? மகாபாரதமா? சிலப்பதிகாரமா?" என்னும் தலைப்பில் திரு. க. சிவராமலிங்கம் தலைமையில் பட்டிமன்றம் நடைபெறும்.

இரண்டாம் நாள் விழா 2 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பண்டிதர் க. சச்சிதானந்தம் தலைமையில் நடைபெறும்.

கவிஞர் இ. முருகையன் தலைமையில் ஈழத்து பிரபல கவிஞர்களின் கவியரங்கம் நடைபெறும்.

மூன்றும் நாள் காலை விழா 3 ஆம் திகதி 9.00 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெறும்.

திரு. வே. ந. சிவராஜா தலைமையில் 'கிஷ்கிந்தா காண்டம்' ஆய்வுக் கருத்தரங்கு இடம் பெறும்.

மூன்றும் நாள் மாலை விழா 3 ஆம் திகதி பகல் 4.30 மணிக்கு க. ஜெயநேசன் தலைமையில் நடைபெறும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் முதல் நாள் பட்டிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேன் முறையீட்டுப் பட்டிமன்றம் நடைபெறும். (இ-5)

### சேவை

எம்மிடம் பல வகையான மணமக்கள் உண்டு. தங்கள் விருப்பப்படி குறித்த நேரத்தில் விவாகம் நிறைவேற்றுவோம். மாவை விநாயகர் மங்கள ஏஜன்சி கொல்லங்கலட்டி, தெல்லிப்பளை கிளை 52/1 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்.


### புனித இயக்கங்களுக்கு ஓர் பணிவான வேண்டுகோள்

கடந்த புதன்கிழமை இரவு பண்டைதீவு மீன் தூள் ஆலைக்குக் கடமைக்குச் சென்ற எனது கணவர் திரு எஸ். லெட்சுமிகுமார் இன்று வரை வீடு திரும்பவில்லை. இதனால் எங்கள் குடும்பம் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கிறது. இவ்வேதனையைப் போக்குவதற்கு எங்கள் இளைஞர்களாகிய நீங்கள் தான் இன்று எங்களுக்கு வழிகாட்டிகள். எங்கள் குடும்ப ஒளி விளக்கை ஏற்றிவைப்பதற்கு நீங்கள் பெரும் முயற்சி செய்வீர்கள் என எதிர்பார்த்து, தங்களிடம் மிகவும் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு,
செய்வதறியாது தவிக்கும்
மனைவி,
சரோஜினிதேவி லெட்சுமிகுமார்


# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

## வானசாஸ்திரத்தில் பிரபலம் பெற்றவர் அல்லின் ஏபிரகாம்

### அடிக்கல் நடும் வைபவத்தில் உரை

காரைநகர், ஜூலை 30

வானசாஸ்திரத் துறையில் பிரபலம் பெற்றவர் அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர்.

திரு. வி. டி. அம்பலம் மேற்கண்டவாறு கூறினார்.

அல்லின் ஏபிரகாம் அம்பலவாணர் எப். ஆர். ஏ. எஸ். நினைவுத்தூபி அடிக்கல் நடும் விழா அண்மையில் காரைநகரில் நடைபெற்றது.

ஞாபகார்த்த சபை உபதலைவர் திரு. ஏ. முருகேசு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தார்.

திரு. வி. டி. அம்பலம் அடிக்கல்லை நட்டுவைத்து உரையாற்றினார்.

நிகழ்ச்சியில் திரளான மக்கள் கலந்து கொண்டனர். டாக்டர் தியாகராஜா, மத்திய மகாவித்தியாலயம் யாழ்ரன் கல்லூரி ஆகியவற்றின் அதிபர்களும் கலந்து கொண்டனர்.

வட்டுக்கோட்டை, யாழ்ப்பாணக் கல்லூரியின் பௌதிகப் பிரிவுத் தலைவர் திரு ரி. விசுவநாதன் நன்றிசொன்னார்.

## றெட்பானா பிரதிநிதி மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜூலை 30

இலங்கை றெட்பானா பிரதிநிதி திரு. குரோன் அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து நிலைமையை நேரடியாக ஆராய்ந்தார்.

இம்மாவட்டத்திலுள்ள அகதிகள் முகாம்களுக்கு விஜயம் செய்த அவர் அகதிகளுடன் உரையாடி பிரச்சினைகளை கேட்டறிந்தார். (இ 21)

## உலகத் தமிழர் குரல்

வேலணை, ஜூலை 30

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் பத்திரிகையான "உலகத் தமிழர் குரல்" இரும்பவும் அச்சிடப்பட்டு எதிர்வரும் 8ஆம் திகதி வெளியீட்டு விழா நடைபெற இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பண்பாட்டு இயக்கத்தின் செயலகத்தில் திரு பொன். பூலோகசிங்கம் தலைமையில் வெளியீட்டு நிகழ்ச்சி நடைபெறும். (இ)

# யாழ் ஆயரின் கூற்று எவ்வகையில் தவறாகும்?

## சென். பற்றிக்ஸ் ஆசிரியர் சங்கம் கேள்வி

யாழ்ப்பாணம் ஜூலை 30

அண்மையில் சென் பற்றிக்ஸ் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு தமது கருத்தை முன்வைத்த யாழ் ஆயரின் கூற்று அப்பழுக்கற்றது — அது எந்த வகையில் தவறாகும்?

- இப்படி சென் பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் சங்கம் விடுத்த அறிக்கை ஒன்றில் கேள்வி எழுப்பியிருக்கிறது.

ஆயரின் உரையை யிட்டு கொழும்பு பத்திரிகைகள் ஆத்திரமூட்டும் வகையில் விமர்சித்திருந்தன. அவற்றுக்கு மறுப்பளிக்கும் வகையிலேயே கல்லூரி ஆசிரியர் சங்கம் இவ்வறிக்கையை வெளியிட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

யாழ் ஆயர் நேர்மையும் துணிவும் உள்ள ஒரு மாமனிதர். வன்முறை எங்கிருந்து வந்தாலும் அதைத் துணிந்து கண்டிப்பவர்.

எத்தகைய வன்முறை எவ்வடிவத்தில் வந்த போதும் அவர் அதை நியாயப்படுத்தவில்லை; மாறாக கடவுளின் நேர்மையுள்ள மனிதரான அவரின் கவனமெல்லாம், தமது மக்கள் - வன்செயலுக்கிரையாகும் உயிர்களைப் பற்றியதாகவே இருந்தது.

"பயங்கரவாதிகள்" எனச் சந்தேகிப்போரோடு தொடர்பில்லாத சட்டத்திற்கமைவான - அமைதியை விரும்பும்- அப்பாவி மக்களுக்கு எதிராக மிகக் கொடிய தீமை விளைவிக்கப்படும் போது யாருமே குரலெழுப்பாத நிலையில், ஆயர் அவர்கள் மௌனமாக இருப்பார் என எதிர்பார்க்க முடியாது.

ஆயுதப்படையினரின் மிலேச்சத்தனமான மனிதப் படுகொலைகளே ஆயர் அவர்களை அவ்விதம் பேசத்தூண்டியது.

வன்முறையைத் தூண்டும் விதத்தில் அவர் ஒரு வார்த்தைகூடனும் உச்சரிக்கவில்லை.

தமிழர்கள் தமது முறையீட்டை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டிய ஒரு கட்டத்துக்கு வந்துவிட்டார்கள் என்றே ஆயர் கூறினார்.

இந்த நாட்டின் அரசிடம், தமது துயரை எடுத்துச் சொல்லியும் அது எடுபடாமல் போனதால் அதை ஐ.நா. சபைக்கு எடுத்துப் போக வேண்டும் என ஆயர் சொன்னதில் என்ன தவறு?

இவ்வாறு அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)


# பிரயாண ஒழுங்குகள்

* கனடா
* ஜேர்மன்
* பிரான்ஸ்
* டென்மார்க்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும்

மற்றும்

பாஸ்போட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட்

ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்.

## INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ,
(வைரவி கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்.



# இதோ மேலும் ஒரு புதிய சேவை

செய்திகள், கடிதங்கள், (DOCUMENTS) ஆவணங்கள், ஒரு நொடிப் பொழுதில் போட்டோப் பிரதி மூலம் கொழும்பிற்கு அனுப்புவதற்கு 200 CM X 300 CM அளவிலான ஒரு பிரதிக்கு ரூபா 65/= மட்டுமே.

நீங்கள் விரும்பிய மொழியில் செய்தியை அனுப்பலாம்.

உலகின் எப்பாகத்திற்கும் ரெலக்ஸ் ரெலிபோன் சேவை

## நிப்பொன் ரெலி ரவல்ஸ்(பிறைவேற் லிமிற்.,)

கஸ்தூரியார் வீதி, ஸ்ரான்லி வீதிச்சந்தி, 2G ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். தொ.இல:- 23364

3 நிமிடம்

| | |
|---|---|
| இந்தியா | 199/- |
| மலேசியா சிங்கப்பூர் அவுஸ்திரேலியா | 230/- |
| பிரான்ஸ் நோர்வே மே. ஜேர்மன் | 260/- |
| கனடா | 320/- |
| சவூதி அரேபியா இங்கிலாந்து | 260/- |

For your INTERNATIONAL TELEX and TELEPHONE SERVICES contact PHONE 23364 - 23866

NIPON TELE TRAVELS 2G, STANLEY ROAD JAFFNA. SRI LANKA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பயம் என்பதையே அறியாத இரும்பினலாய உள்ளமும் இதயமும் தேவை.

—சுவாமிவிவேகானந்தர்

உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
[illegible] நிலைய வீதி, 22073
யாழ்ப்பாணம், 30-07-86 த பெ 23

# மீண்டும் இரட்டை வேட நாடகம் தானா!

கடந்த இரண்டு, மூன்று இரவுகளாக யாழ்ப்பாண நகரிலும், அதனை அண்டிய பகுதிகளிலும் வாழும் மக்கள் கண் விழிக்கிறார்கள்!

கோட்டை முகாமிலிருந்து ஏவப்படும் ஷெல் குண்டு - ஆட்லறி ஷெல் எப்போது வந்து வீட்டில் விழுந்து உயிரை மாய்க்கும் என்ற மரண பயத்துடன் இரவைக் கழிக்கிறார்கள்.

ஆட்லறி ஷெல்லின் சத்தம் கட்டிலில் படுத்த குழந்தைகளை ஓர் அடி உயரத்துக்கு எழுப்பி விழுத்துகிறது. அது கனறும் அலை வரிசை கட்டடங்களை அதிர வைக்கிறது; கிடுகிடுக்க வைக்கிறது.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக ஓய்ந்திருந்த போர்ப் பின்னணி மெது மெதுவாகமீண்டும் இங்கு பரவத் தொடங்குகிறது.

யாழ் நகரில் மட்டுமன்றி குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் மத்தியில் அச்சமும் பீதியும் குடிகொள்வதைக் காண முடிகிறது

எமன் எந்த வடிவில் வருவான் ஷெல் வடிவிலா அல்லது துப்பாக்கிக் குண்டு வடிவிலா? எப்போது வருவான்? பகலிலா, இரவிலா? எங்கே வருவான்? வீட்டிலா, வீதியிலா? இப்படி ஒரு நெருக்கடி நிலைமை மீண்டும் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களுக்கு ஏற்படுமோ என்ற சந்தேகம் மக்கள் மனதில் நிறைந்து பரந்து வருகிறது.

அதற்குக் காரணம்? சிறிது காலம் முகாம்களுக்குள் இருந்த ஆயுதப்படையினர் மீண்டும் வெளியே வர முயற்சிக்கின்றனர். அவர்கள் அவ்வாறு முயற்சிப்பதால் ஏற்படும் விளைவுகளை, மக்களுக்கு ஏற்படும் துன்பங்களை எழுத்தில் அச்சிட்டுத்தான் தெரிய வேண்டும் என்பதில்லை ஏற்கனவே கண்ணால் கண்டு, செய்யால் உணர்ந்த அனுபவங்கள்

பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று அரசாங்கம் திடசங்கற்பம் பூண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா தொடக்கம் தேசிய பாதுகாப்பு மந்திரி லலித் வரை சமாதானத் தீர்வுக்குத் தம்மை அர்ப்பணித்துவிட்டாற் போல் கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

அத்தகைய ஒரு சூழ்நிலையில், குடாநாட்டிலும், ஏனைய தமிழ்ப் பகுதிகளிலும் படைகள் முகாம்களை விட்டு வெளியே வர முயற்சிப்பதும், வருவதும் ஏன்?

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இடை நிறுத்துவதற்கும், யுத்த நிறுத்த நிலைமை ஒன்றை உருவாக்குவதற்கும் அரசாங்கம் விருப்பம் கொண்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

உண்மையிலேயே அந்த விருப்பம் இருக்குமானால் வடக்கு கிழக்கில் மேலும் படைபலத்தை அதிகரிப்பதும், ஆயுத பலத்தை அதிகரிப்பதும், போர் விமானம், போர்க் கப்பல் ஆகியவற்றின் எண்ணிக்கையை அதிகரிப்பதும் ஏன்?

படைச் சிப்பாய்களை முகாம்களுக்கு வெளியே வர அனுமதிப்பது ஏன்? இராணுவ நடவடிக்கையையும், சமாதானப் பேச்சையும் ஒரே நேரத்தில் செய்வது என்ற கொள்கையுடன் அரசு செயற்படுகிறதா? அது எவ்வாறு பொருந்தும்?

வெடிகுண்டு, நிலக்கண்ணிச் சம்பவங்கள் மூலம் போராளிகள் சமாதானப் பேச்சை முறியடிக்க முயற்சிக்கிறார்கள் என்று அரசாங்கம் குற்றம் சாட்டுகிறது.

படைகள் முகாம்களை விட்டு வெளியே வந்து தாக்குதல் நடத்த முற்படுவது சமாதான முயற்சியை முறியடிக்காதா?

சமாதானப் பேச்சு மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காணும் விருப்பம் அரசுக்கு உண்மையாகவே இருக்குமானால், முதலில் படைகளைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும். அதனைத் தனது நல்லெண்ணத்தின் ஆரம்ப நடவடிக்கையாகவேனும் செய்து காட்ட வேண்டும்.

இல்லையேல் சமாதானம் என்று கனிவொழுகப் பேசிக் கொண்டு இராணுவ நடவடிக்கையை நாடும் பழைய நிலைமை தான் என்று கொள்ள வேண்டியது தான்!

அதாவது பழையபடி வேதாளம் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகவே முடியும். மீண்டும் இரட்டை வேட நாடகமாகத் தான் முடியும்.

## அகதிகளுக்கு அரச உதவி கிடைக்கும்வரை புனர்வாழ்வுக் கழகம் உதவத் தயார்

யாழ்ப்பாணம், ஜூலை 30

இடம்பெயர்ந்த அகதிகளுக்கு அரசாங்கம் உதவி செய்யத் தொடங்கும் வரை பொது ஸ்தாபனங்களுடன் சேர்ந்து தாங்களும் உதவிசெய்யத் தயாராக உள்ளதாக அகதிகள் புனர் வாழ்வுக் கழகத் தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

அகதிகளாக இடம் பெயர்ந்தவர்களுக்கு நிவாரண உதவி வழங்கத் தொடங்குவதற்கு அரசாங்கத்திற்கு ஒரு வாரகாலம் தேவைப்படுகிறது.

வேறு மாவட்டங்களுக்குஇடம்பெயர்ந்தவர்களின் விவரங்களைச் சேகரிக்கவும்-

அவர்களது சொந்த மாவட்ட அரச அதிபரிடம் அவைபற்றி உறுதிப்படுத்தவுமே மேற்படி கால அவகாசம் அரசுக்குத்தேவைப்படுகிறது.

இக் கால கட்டத்தில் அகதிகளுக்கு உணவு உதவிகளை மற்ற பொது ஸ்தாபனங்களோடு சேர்ந்து வழங்க தாங்கள் தயாராக உள்ளதாக அகதிகள் புனர் வாழ்வுக் கழக தலைவர் பேராசிரியர் சிவத்தம்பி தெரிவித்தார். (உ-5)

# ஆப்கனிலிருந்து ரஷ்ய துருப்பு வாபஸ் இல்லை

## கோர்ப்பச்சேவ் அறிவிப்புக்கு கிளர்ச்சியாளர்கள் மறுப்பு

காபூல், ஜூலை 29

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்யத் துருப்புகள் படிப்படியாக வெளியேறி வருகின்றன என்ற ரஷ்யாவின் தகவலை ஆப்கன் கிளர்ச்சியாளர்கள் மறுத்துள்ளனர்

இவ்வருட இறுதிக்குள் ஆறு பிரதான படைப் பிரிவுகள் ஆப்கனில் இருந்து வாபஸ் பெறப்படும் என ரஷ்ய ஜனாதிபதி கோர்ப்பச்சேவ் அறிவித்திருந்தார்.

படைப்பிரிவுகள் வாபஸாகும் வேலை ஆரம்பமாகி உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனை மறுத்த கிளர்ச்சியாளர்கள் மேலும் தெரிவித்ததாவது.

ஆப்கனில் 1 லட்சத்து 18 ஆயிரத்துக்கும் அதிகமான ரஷ்ய துருப்புக்கள் நிலை கொண்டுள்ளன. இவர்களில் 10 ஆயிரம் துருப்புக்கள் முதற்கட்டமாக வாபஸ் பெறப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டதை ஏற்றுக்கொள்ள முடியாது

கடந்த காலங்களில் கூடரஷ்யா இவ்விதமாகப் பல தடவைகள் அறிவித்திருந்த பொழுதும் படை பரிவர்த்தனையை மட்டுமே செய்து வந்தது.

அதே போன்றே இம்முறையும் நடைபெறலாம்

இப்படித் தெரிவிக்கப்பட்டது. (இ-ஒ)

## பாக் வரவேற்பு

இஸ்லாமபாத் ஜூலை 29

ஆப்கானிஸ்தானில் இருந்து இவ்வருட இறுதிக்குள் ஆறு படைப் பிரிவுகளை ரஷ்யா விலக்கிக் கொள்வதாக கூறும் ரஷ்ய ஜனாதிபதியின் அறிவிப்பை பாகிஸ்தான் வரவேற்றுள்ளது.

ஆப்கானிலிருந்து ரஷ்ய துருப்புகளின் வெளியேற்றத்திற்கு இது ஒரு நடவடிக்கையாக இருக்கும் என பாகிஸ்தான் நம்புவதாக வெளியுறவு அமைச்சரக அதிகாரி இஸ்லாமபாத்தில் தெரிவித்தார்

ரஷ்ய நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது என ஆப்கன் வெளியுறவு மந்திரி திரு ஷா மொகமட் டோஸ்ட் தெரிவித்தார். (இ-ஒ)

## லெபனானில் மீண்டும் கலவரம்: பலர் பலி

பேரூட், ஜூலை 29

லெபனான் தலைநகரில் மீண்டும் கலவரம் ஆரம்பமாகியதில் பலர் பலியானார்கள் பலர் காயமடைந்தனர்

இந்தக் கலவரங்களில் ரொக்கட் தாக்குதல்களும் மோட்டார் ஷெல் தாக்குதல்களும் இடம் பெற்றன

இதனால் பல குடியிருப்புப் பகுதிகளும் சேதமடைந்தன.

இக்கலவரங்கள் கிறிஸ்தவ - முஸ்லிம் தீவிரவாதிகளுக்கிடையே ஆரம்பமாகியது. (இ-ஒ)

## எதியோப்பிய தலைவர் கண்டனம்

அடிஸ்அபாபா ஜூலை 29

தென் ஆபிரிக்காவிற்கு எதிராக முழு அளவில் பொருளாதாரத் தடை விதிப்பது சம்பந்தமாக அமெரிக்கா மற்றும் மேற்கத்திய வல்லரசுகளின் பிடிவாதப் போக்கை எதியோப்பியத் தலைவர் கண்டித்துள்ளார்

நேற்று அடிஸ்அபாபாவில் அரபு ஐக்கிய ஸ்தாபனத்தின் 22 ஆவது ஆண்டுக் கூட்டத்தைத் தொடக்கி வைத்து அவர் பேசினார்

மேற்கத்திய நாடுகள் தங்கள் பொருளாதார வளர்ச்சியில் ஆர்வம் கொண்டுள்ளனவே தவிர மனித உரிமைகளில் அல்ல என்பதை அவற்றின் நடவடிக்கைகள் நிரூபித்துவிட்டன என்றும் அவர் கூறினார். (இ-ஒ)

## அதிக மழை

சீனாவில் அதிக மழையினால் மிகுந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளது பாரிய துறைமுக வேலைகளும் இதனால் ஸ்தம்பிதமடைந்துள்ளன (இ-ஒ)

# வெளி உலகில்

### ஆளும் கட்சி வெற்றி

தாய்லாந்தில் நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும்கூட்டணியினர் வெற்றியைத் தக்க வைத்துள்ளனர்.

### தடைகளை நீக்குக

ரஷ்யாவிற்கும் சீனாவிற்கும் தானியங்கள் விற்பனையில் விதிக்கப்பட்டிருக்குந் தடைகளை நீக்கி பல சலுகைகளை வழங்குமாறு அமெரிக்க ஜனாதிபதியை செனட் சபை கோரியுள்ளது.

### கோஷ்டி மோதல்

பிலிப்பீன்ஸ் முன்னாள் ஜனாதிபதி மார்கோஸின் ஆதரவாளர்களுக்கும் அக்கினோவின் ஆதரவாளர்களுக்கும் இடையில் மணிலாவில் மோதல் ஏற்பட்டதில் பலர் மடிந்தனர்.

### லண்டன் திரும்பினார்

தென் ஆபிரிக்க ஜனாதிபதி போதாவை இரண்டாவது தடவையாகவும் சந்தித்த பின்னர் பிரிட்டிஷ் வெளியுறவு அமைச்சர் ஜெப்ரி ஹோவ் நேற்று லண்டன் திரும்பினார்.

### முடிவு இல்லை

ஜெனிவாவில் கூடிய எண்ணெய் வள நாடுகளின் கூட்டம் எவ்வித மான தீர்மானங்களையும் எடுக்காமலேயே முடிவடைந்தது

### வன்முறைகள் வேண்டாம்

அரபு—இஸ்ரேலல் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் கண்டுள்ள இவ்வேளையில் வன்முறைகளை நிறுத்திக்கொள்ளுமாறு இஸ்ரேல் பிரதமர் பெரஸ் தமது நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

### அமெரிக்கர் விடுதலை

சுமார் 19 மாதகாலம் லெபனான் தீவிரவாதிகளால் சிறைப்பிடித்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கரான ஜெங்கோ அடிகளார் விடுதலையின் பின்னர் கிழக்கு ஜெர்மனியில் வைத்திய பரிசோதனைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### சிரியா மீது குற்றச்சாட்டு

கிழக்கு பேரூட் பகுதியில் 32 பேரைப் பலியாக்கி 100க்கும் அதிகமானோரைக் காயப்படுத்திய பாரிய குண்டு வெடிப்புக்கு சிரிய தீவிரவாதிகள் காரணமாவர் என லெபனான் குற்றம் சாட்டியுள்ளது.

### சூரினமில் புரட்சி சதி முறியடிப்பு

வாஷிங்டன், ஜூலை 29

சூரினம் அரசைக் கவிழ்க்கச் சதி செய்தனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நால்வரை நியூ ஒலியன்ஸ் விமான நிலையத்தில் அமெரிக்கப் பொலீஸார் கைது செய்தனர்

இவர்களிடம் பெருந்தொகையான ஆயுதங்களும் வெடிமருந்துகளும் இருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நியூ ஒலியன்ஸிலிருந்து ஹொண்டுராஸ் சென்று அங்கிருந்து இவர்களுக்காக வாடகைக்கு அமர்த்தப்பட்ட சிறிய விமானம் ஒன்றில் சூரினம் செல்லத் திட்டமிட்டு இருந்தனராம்.

1975 ஆம் ஆண்டு ஒல்லாந்து தேசத்திடமிருந்து சூரினம் சுதந்திரமடைந்தது- (ஒ)

# வித்தாரம்

தம்பி முரளி! எப்பிடி? மோட்டச்சைக்கிளை இன்னும் கைவிடயில்லைப் போல. சொந்தமாவே வாங்கிவிட்டியோ? மெத்த நல்லம். காசு இல்லை இல்லை என்பாய். உதுக்கு எங்காலை காசு வந்தது. சரி அதைப் பற்றின ஆராய்ச்சி இப்போதைக்கு வேண்டாம். நீ மோட்டச் சைக்கிள் வைச்சிருந்தா எனக்கும் அவசரத்துக்கு உதவும் தானே!

பிறகு எப்பிடி? உனக்கு என்னத்தை இண்டைக்குச் சொல்லுறது...! தென்னிலங்கையைப் பார்த்தியே. மாகாண சபைத் திட்டத்துக்கே அங்கை அரசியல் கட்சிகளும், சிங்கள தீவிரவாதிகளும் ஆ, கூ போடத் தொடங்கி விட்டினம்.

சிறிமா ஒருபக்கம் மற்றவை ஒரு பக்கமெண்டு வழமையான குட்டை குழப்புற வேலைகள் நடக்குது. பிழையோ சரியோ தான் நினைச்சதை "புக்டோன்" பண்ணுவார் எண்ட மாதிரி அதிஉத்தமர் பேசிக்கொண்டிருக்கிறார். உள்ளுக்கை என்னவோ ஆருக்குத் தெரியும்? அரசியல் எண்டா உப்பிடித்தான் கலக்கித் தெளிஞ்சாத்தானே சரியான நிலை தெரியும். அது இருக்கட்டும்.

அவர் கொக்கின் அ.க. மாநாட்டிலை முக்கிய பங்கு வகித்தார். சமஷ்டி அமைப்புக் கட வழக்கலாம் எண்ட மாதிரிச் சொல்லுறார். இப்ப ஒற்றை ஆட்சியுக்கை சமஷ்டியும் வேலை செய்யும் என்கிறார். புரியாத புதிரா இருக்குது! வடக்கு கோளாறோ?

அடுத்தவர் பேர்ஷட் சொய்சா. தமிழ் மொழிப் பிராந்திய போசகர் சந்தாக தான் அதை எதிர்ப்பேன் எண்டு சொல்லி இருக்கிறார். தமிழ் மக்களுக்குப் பிராந்திய சுயாட்சி கொடுப்பதற்கு அவற்றை கட்சி விரும்பயில்லையோ? அல்லாட்டால் தென் இலங்கையிலை தங்கடை செல்வாக்கைக் காப்பாத்திறத்துக்கு அந்த நிலையை பிடிக்க வேணும் எண்டு நினைச்சிட்டாரோ?

டாக்டர் எம் ஜி. எம். களில் பழுத்த யூ.என் பி. பழம். இந்த வயதிலை அவருக்கு ஒரு புது யோசனை பிறந்திருக்கு. இஞ்சை இருந்து இந்தியாவுக்குப் போறதுக்கு விசாக் குடுக்க ஒரு கட்டுப்பாடு கொண்டு வர வேண்டும் எண்டுசொல்லி இருக்கிறார்.

இந்தியாவுக்கு ஒரு இலங்கையர் போறதால இந்தியாவுக்கு என்ன பாதிப்போ கெடுதலோ இல்லை எண்டு அந்த நாட்டுத் தூதரகம் நினைச்சால் விசாக் கொடுக்கலாம். அது தானே சர்வதேச விதி

வெளிநாட்டுக்குப் போகக்கூடாது எண்டு ஒருவருக்குத் தடைபோடும் ஆளின் பாஸ்போர்ட்டை இலங்கை அரசு பறிமுதல் செய்தா விஷயம் சரியாகுது

அதுக்கு ஏன் இந்தியா இலங்கையிட்டை கேட்டுத்தான் விசா குடுக்க வேணும் எண்டு ஒப்பந்தம் செய்ய வேண்டிய அவசியம் இருக்கெண்டு விளங்கயில்லை.

வயசு போனால் தடுமாற்றம் வரும் எண்டது உண்மைதானப்பா!

திண்ணைப்பேச்சு

## இடம் மாற்றம்

கிளிநொச்சி, ஜூலை 30

கிளிநொச்சியில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக கிளிநொச்சி பொலீஸ், இராணுவக் கூட்டுமுகாமிற்கு அருகில் இயங்கிவந்த கிளிநொச்சி மாவட்ட சமூக சேவை உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி சமூக சேவை நிலையம் ஆகியன தற்காலிகமாக வேறு இடங்களுக்குஇடம் மாற்றம் செய்யப்பட்டுள்ளன. (உ-76)

# கிளிநொச்சி மாவட்ட வைத்தியசேவை மீண்டும் சீரடையுமா?

பொது மக்களின் அத்தியாவசிய தேவைகளின் ஒன்றுகிய வைத்திய சேவையை கிளிநொச்சியில் சீர்குலையவிடாது பொது மக்களுக்கு அளிப்பதற்கு சம்பந்தப்பட்டவர்கள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொது மக்களும், பொதுஸ்தாபனங்களும் வேண்டுகோள் விடுத்துள்ளன

கிளிநொச்சி மக்களின் உயிர்நாடியாக விளங்குவது கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை ஒன்றே

இவ்வைத்தியசாலையோ கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிப்பைத் தொடர்ந்து சுதந்திரமாக இயங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது

அதன்பின் கிளிநொச்சியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களைத் தொடர்ந்து அது முற்றாக ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

இங்கு கடமையாற்றிய பலரும் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியிலும் ஏனைய உருத்திரபுரம், வட்டக்கச்சி, அக்கராயன், தர்மபுரம் போன்ற இடங்களில் உள்ள வைத்தியசாலைகளிலும் தங்கியுள்ளனர்.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட மக்கள் ஆகக்குறைந்த வைத்திய தேவைகளைத் தானும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருந்து வருகின்றனர்.

தொற்று நோய்களின் தாக்கங்களுக்கு ஆளாகியுள்ளதுடன் அவசர சிகிச்சையைத் தானும் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர்.

இவர்கள் சிகிச்சை பெறுவதற்கு சுமார் 42 மைல் பிரயாணம் செய்து யாழ்ப்பாணம் செல்ல வேண்டும்.

நெடுஞ்சாலையோ மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளது.

அதனைவிட பிரயாணமோ தற்போதைய அசம்பாவிதத்தால் பெரிதும் சீர்குலைந்துள்ளது.

இந்த நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, அக்கராயன் குளம் கிராமிய வைத்தியசாலையையும் தர்மபுரம், வேரவில், உருத்திரபுரம் பிரசவ வைத்தியசாலைகளையும், கண்டாவளை, வட்டக் [illegible] ஆனையிறவு மத்திய [illegible]

முறையில் இயங்க வைப்பது யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கடமை ஆகும்.

பூநகரி, அக்கராயன், தர்மபுரம் உருத்திரபுரம், வேரவில், கண்டாவளை, வட்டக்கச்சி, வன்னேரிக்குளம், ஆனையிறவு ஆகிய இடங்களிலோ போதிய மருந்து வகைகள் இல்லை

தேவையான தடுப்பூசிகள் இல்லை. போஷாக்குக் குறைந்த குழந்தைகளுக்குத் திரிபோஷா வினியோகிக்க முடியவில்லை

இந்நிலையில் சுகாதார சேவைகளின் ஆகக் குறைந்த தேவைகளைத் தானும் இந்நிலையங்களில் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது

ஆகவே மக்களின் அத்தியாவசிய சேவையான வைத்தியசேவை கிளிநொச்சி மாவட்ட மக்கள் அனைவருக்கும் கிடைக்க வழி செய்யப்பட வேண்டும் (இ-76)

## சமய சந்நிதிகளில்

### குடாக்கரை முருகமூர்த்தி உற்சவம்

சாவகச்சேரி, ஜூலை 30

சாவகச்சேரி கச்சாய் வீதி குடாக்கரை முருகமூர்த்தி ஆலயவருடாந்த உற்சவங்கள் கடந்த ஞாயிறன்று கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகின.

சித்தாந்த பண்டிதர், பிரதிஷ்டா வித்தகர் சிவஸ்ரீ கு ஜெகதீஸ்வரக் குருக்கள் கொடியேற்ற வைபவத்தை நடத்திவைத்தார்.

எதிர்வரும் 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் ஆடி அமாவாசைத் தினமாகிய 5 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-ஓ)

### பால்ய விவாகம் தடைச் சட்டம்

புதுடில்லி, ஜூலை 29

இந்தியாவில் பால்ய விவாகம் சட்ட மூலம் தடை செய்யப்பட்டுள்ளது.

இதுவரை தேச வழமை சட்டத்தை காரணமாக வைத்து பலர் பால்ய விவாகங்களை அனுசரித்துவந்த வழமை இதனால் முற்றாக ஒழிக்கப்படும (ஒ)

# வாசகர் திருமுகம்

## யாழ் நூல் நிலைய நஷ்டஈடு: தாமதம் செய்வது இனியும் நியாயமில்லை

1981 ஜூன் முதல் நாள் இரவில் யாழ் பொது நூலகம் பொலீஸாரினால் எரிக்கப்பட்டது. ஆனால் அந்த உண்மையை மறைக்க அரசு பல காலமாக முயன்றது. எனினும் உண்மை உலகுக்குத் தெரிய வந்தது.

அதன் பின்னர் நூலகம் எரிக்கப்பட்டதால் ஏற்பட்ட சேதம் குறித்து மதிப்பீடு செய்ய அரசு நடவடிக்கை எடுத்தது

லயனல் பெர்னாண்டோ விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணைப்படி, குழு நூலகத்துக்கு ஒரு கோடி ரூபா நஷ்டஈட்டைச் சிபார்சு செய்தது.

இதுவரை அந்த நஷ்டஈடு வழங்கப்படவில்லை. இதை மறைப்பதற்காக 'ஜனாதிபதி யாழ் நூலக புனரமைப்புநிதி' என்ற பெயரில் தனியான வங்கிக் கணக்கு ஒன்று ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதி நிதியில் இருந்து பெறப்பட்ட 10 லட்சம் ரூபா அந்த நிதியில் வைப்பாகப் போடப்பட்டது

பின்னர் அந்த நிதியில் இருந்து நூலகத்துக்கு ஒரு லட்சம் ரூபா வழங்கப்பட்டது.

நூலகத்தை எரித்தவர்கள் பொலீஸாரே என்று மாகாணசபை சம்பந்தமான செய்தியாளர் மாநாட்டில் ஜனாதிபதியே ஒப்புக்கொண்டு விட்டார்.

அதன் பின்னரும் லயனல் பெர்னாண்டோ குழு சிபார்சு செய்த ஒரு கோடி ரூபா நஷ்டஈட்டை வழங்காதிருக்க நியாயமில்லை.

'ஜனாதிபதி யாழ் நூலக புனரமைப்பு நிதி' வங்கிக் கணக்கில் பொதுமக்கள் இட்ட நன்கொடைகளும் முழுமையாக புறம்பாக யாழ் நூலகத்துக்கு வழங்கப்படுவதுதான் முறைமையாகும்.

விரைவில் இவை வழங்கப்படும் என்று எதிர் பார்ப்போம்.

இன்பரசு

யாழ்ப்பாணம்

## புலமைப் பரிசில் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை 30

ஐந்தும் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப் பரிசில் பரீட்சை அடுத்த 10 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ் மாவட்டத்தில் மொத்தம் 81 பரீட்சை நிலையங்களில் சுமார் 9 ஆயிரம் மாணவர்கள் வரை இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

நயினாதீவு, வேலணை, புங்குடுதீவு, அனலைதீவு ஆகிய இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (உ-5)



### வள்ளுவன் வாக்கு

குறள்:

மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

பொருள்:

ஒப்புரவாகிய பெருந்தகைமை உடையவனிடம் செல்வம் சேர்ந்தால், அந்த எல்லா உறுப்புக்களும் மருந்தாகிப் பயன்படத் தவறாத மரம் போன்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ வர்ணப் புகைப்படம் பிரதி ஒன்று ரூ 5/=
★ Processing Free
★ விற்பனை வர்ண புகைப்படச் சுருள்கள்
KODAK - SAKURA-TUDOR
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 23628

# உதயன்

30-07-1986 புதன்கிழமை

உங்களை அழைக்கின்றது!
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
★ தரமான வர்ணப் புகைப்படப் பிரதிகள்
★ கம்பியூட்டர் முறையில்
★ குறைந்த செலவில்
★ சிறந்த சேவையில்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்.

## டிக்ஸிற் டில்லி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதிலளித்தார்.

"தமிழர் விடுதலைக் கூட்டணியினருக்கும் தமிழ்ப் போராளிகளுக்கும் இடையே நடைபெறும் பேச்சுக்களுக்கு உதவி டிக்ஸ் இதைச் சொல்லி புதுமையாக செல்கின்றேன்"- என்று திரு. டிக்ஸிற் சொன்னார்.

புதுடில்லி புறப்படும் முன்னர் திரு. டிக்ஸிற் திரு. ஜெயவர்த்தனவை நேற்று நடந்த திகதிகள் நாளை சந்தித்துப் பேசினார் 30 நிமிடங்கள் இப் பேச்சுக்கள் நீடித்தன.

பம்பாய் மூலம் நேற்று மாலை திரு டிக்ஸிற் புதுடில்லி சென்றடைந்தார். (இ-எ)

கொழும்புக்கு விமானப் பயணம்

பின்வரும் தேதிகளில், குறிப்பிட்டளவு ஆசனங்கள் மட்டும் உள்ளன. உடனே பதிவு செய்க

ஜூலை 31 (வியாழன்)
ஆகஸ்ட் 1, 2, 3
(வெள்ளி, சனி, ஞாயிறு)

Mack Communications & Travels
இல 8 1-ம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 24791 24836

ROCK
Engineers & Contractors
Water Supply &
Building Works

குழாய்க் கிணறுகள்
(TUBE WELLS)

எமது இயந்திரங்கள் மூலம் குழாய்க் கிணறுகளை அமையுங்கள் சிறந்த பயனைப் பெறுங்கள்

பயன்களாவன (Advantages)

(1) பெரிய கிணறு (Open Dug Well) இலும் பார்க்க குழாய்க்கிணறு (Tube Well) பொருளாதாரமானது.
(2) வேண்டியளவு நீரை ஒரு கிணற்றிலிருந்தே தொடர்ச்சியாக 24 மணித்தியாலமும் பெறலாம் (குறைந்தது 5 ஏக்கர் நிலத்தில் பயிர் செய்யலாம்)
(3) சுத்தமானதும் பாதுகாப்பானதும் கூட. (Pure, Fresh, Healthy, & Safety) குழந்தைகளையும், வயோதிபர்களையும் ஆபத்திலிருந்து பாதுகாருங்கள்
(4) கிணற்றுக்காகச் செலவிடும் இடத்தை மீதப்படுத்தலாம் 4" விட்டம் (4" Diameter)
(5) குறைந்த நேரத்தில் கிணற்றை அமைக்கலாம் (4—24 மணித்தியாலங்கள்)
(6) காவி, உப்பு நீர் உள்ள இடத்திலிருந்து நன்னீரைப் பெறுதல்

தொடர்பு கொள்ளுங்கள்

றொக் எஞ்ஜினியர்ஸ்
பருத்தித்துறை வீதி, கோப்பாய்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட், நிறுவனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது வெளியீட்டு திகதி 30—07—1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka Under Number QJ 60 86

ரயில்வே திணைக்களத்தில்

# ஆயுதப் பயிற்சி பெற்ற 200 பேருக்கு கல்தா?

## திருமலையில் கடமைபுரிய மறுத்தனராம்

கொழும்பு, ஜூலை 30 ஆயுதப்பயிற்சி பெற்ற 200 ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களை வேலையில் இருந்து நீக்க ரயில்வே திணைக்களம் ஆலோசித்து வருகிறது. திருகோணமலைக்குச் சென்று கடமை புரிய மறுத்ததே இதற்குக் காரணமாகும்.

இதுபற்றிய விவரம் வருமாறு:

ரயில்வே பாதுகாப்பு ஊழியர்களுக்கும் ஆயுதப் பயிற்சி அளிப்பது என்று தேசிய பாதுகாப்பு அமைச்சு முடிவு செய்தது.

அதன்படி 219 பாதுகாப்பு ஊழியர் தெரிவு செய்யப்பட்டு பனாகொட இராணுவ முகாமுக்கு பயிற்சிக்கு அனுப்பப் பட்டனர்.

பயிற்சி முடிந்தபின்னர் திருமலைக்கு சென்று பணிபுரியும்படி அவர்களுக்குக் கூறப்பட்டது.

19 பேர் அதற்கு சம்மதித்து திருமலை சென்றனர். 200 பேர் அதற்குச் சம்மதிக்கவில்லை

சம்மதிக்காத இந்த ஊழியர்களை வேலைநீக்கம் செய்வது என்று ரயில்வே திணைக்களம் தற்போது தீர்மானித்துள்ளது.

முதலுக்கே தேசம் வந்த நிலைக்கு ஆளான இந்த ஊழியர்கள் என்ன செய்வது என்று தெரியாது தவிக்கின்றனர் (உ-ஐ-எ)

## தெல்லிப்பளை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லிப்பளைச் சந்தி, அம்பனைச்சந்தி, தெல்லிப்பளை உபஅலுவலகம் ஆகிய இடங்களிலும் குவிக்கப்பட்டு எரிக்கப் பட்டன

மின்சாரசபை அதிகாரிகளின் இந்த நடவடிக்கைகளுக்கு அப்பகுதி இளைஞர்களும் உதவி புரிந்தனர்.

அடிக்கடி இப்பகுதியில் திடீர்முற்றுகைகளை நடத்தி சட்ட விரோத மின்பாவனையை முடிவுக்குக்கொண்டுவரத் திட்டமிடப்பட்டிருப்பதாக மின் அத்தியட்சகர் திரு ஜெயரத்தினசிங்கம் தெரிவித்தார்

சட்டவிரோத மின்பாவனையினால் ஒரு லட்சம் ரூபாவரையில் தெல்லிப்பளை மாவட்ட அபிவிருத்திச்சபை உப அலுவலகம் நஷ்டமடைந்திருப்பதாகவும் —

அப்பகுதி டிரான்ஸ்போமர் எரிந்துபோகும் நிலைமை ஏற்பட்டு விட்டதாகவும் கூறப்பட்டது (இ-எ)

## கன்டீன்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டர் இருக்கக்கூடியதாக, பிரதான வயரில் இருந்து சட்டவிரோதமாக மின்சாரம் பெற்று வொயிலர் ஒன்றை பாவித்து வந்த இன்னொரு கன்டீன் உரிமையாளரும் திடீர் சோதனையின் போது சோதனைக்கோஷ்டியிடம் அகப்பட்டுக்கொண்டார்

இவர் தெல்லிப்பளைப் பகுதியில் வைத்தியசாலை ஒன்றில் கன்டீன் நடத்தி வருபவர்.

இவருக்கு 2000 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அத்துடன் இச் செயலால் உப அலுவலகம் இழந்த வருமானத்தையும் செலுத்தும்படி இவருக்கு உத்தரவிடப் பட்டது

இவருக்கு அபராதம் வருமானப்பணம் முதலியவற்றைச் செலுத்தத் தவணை வழங்கப்பட்டது (இ-எ)

## பீரங்கிப்படகு சேதம்

யாழ்ப்பாணம் ஜூலை 30 காரைநகர் கடற்படை வள்ளங்கள் மீது இங்கட்கிழமை மக்கள் விடுதலைப் படையினர் நடத்திய தாக்குதலில் கடற்படை பீரங்கிப் படகு ஒன்று சேதமானது என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக ஈ பி ஆர் எல் எவ் இயக்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

28 ஆம் திகதி நண்பகல் காரைநகர் கடற்படையினர் வந்த மூன்று பீரங்கிப் படகுகள் மீது மக்கள் விடுதலைப்படை மோட்டர் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இத்தாக்குதலினால் கடற்படை பீரங்கிப் படகு ஒன்றும் சேதமடைந்தது.

மக்கள் விடுதலைப் படையின் மோட்டர் ஷெல் தாக்குதலில் கடற்படையினர் சிலர் கொல்லப்பட்டனர்.

ஏனையோர் படகுகளிலிருந்து குதித்து நீந்தி முகாமுக்குத் தப்பிச் சென்றனர். (இ-10)

## நள்ளிரவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெடித்தன.

இத் தாக்குதல்களின் போது காயமடைந்தவர்களும் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

காயமடைந்தோர் விபரம் வருமாறு:-

எஸ் கணபதி (37 வயது) பிரப்பங்குளம்
ஏ இராசன் (22வயது) யாழ்ப்பாணம்.
என். கமலேசன் (22 வயது) யாழ்ப்பாணம்
இ மார்க்கண்டு (60 வயது) ஆனைக்குளம்.
(இ-10)

## நாடு முழுவதும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாகக் கூறியிட்டார்.

நேற்று ஜனாதிபதியை மல்வத்தை மகாநாயக்க தேரர் சந்தித்தார்

அப்போதே அவர் மாகாண சபையை எதிர்க்கும் யோசனையை ஜனாதிபதி திரு ஜெயவர்த்தனவிடம் வெளியிட்டார்

கையொப்ப இயக்கம்

மறுபுறத்தில் — பௌத்த மகாசங்கம், சிங்கள பிரஜைகள் அமைப்பு ஆகியன மாகாண சபை யோசனையை எதிர்த்து கையொப்பங்கள் சேகரிக்கும் இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளன

மருதானையில் உள்ள விகாரை ஒன்றில் சில தினங்களுக்கு முன்னர் கையொப்ப இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.

அதே நேரத்தில் உலக பௌத்த தேரர்கள் சபையும் இலங்கை ஐக்கிய பௌத்த சங்கமும் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டுள்ளன.

மாகாணசபை யோசனைகள் சிங்கள இனத்துக்கு புதைகுழி தோண்டுவதற்கே கொண்டுவரப் பட்டுள்ளன —

இப்படி அத் துண்டுப் பிரசுரங்களில் கூறப்பட்டுள்ளது (அ-ஐ-எ)

## தமிழர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டணியின் அழைப்பை நிராகரித்துவிட்டன

கூட்டணியின் அழைப்பை நிராகரித்ததற்கான காரணங்கள் குறித்து ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் உள்ள மூன்று அமைப்புக்கள் அறிக்கை வெளியிட்டுள்ளன.

கூட்டணியின் அழைப்பை ஏற்றுப் பேச்சுக்களை நடத்துவது மாகாணசபைகள் போதுமானவையாக இருக்கின்றன என்ற எண்ணத்தை இலங்கை அரசின் மனதில் ஏற்படுத்துவதாக முடியும் — இப்படி ஈழம் தேசிய விடுதலை முன்னணியின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் கூட்டணி அரசாங்கத்துடன் தொடர்ந்து பேச்சு நடத்தி ஒரு சாதகமான தீர்வுக்கு வருவதற்கு ஈ. தே. வி முன்னணி தடையாக இருக்காது என்று அறிவித்திருப்பதாகச் செய்திகள் தெரிவித்தன. (இ-எ)

93-ம் நாள் நினைவஞ்சலி



கதிரவேற்பிள்ளை மனோகரன்

ஈழமண்ணில்: 04-09-1967
ஈழவர் மனங்களில்: 29-04-1986

வட்டுமாநகர் செய்த தவப்பலனால்
சுடர் ஒளியாய் நீயும் வந்துதித்தாய்
நாடே வீடென — பரந்த
நல்நோக்குடன் பதினறுவயதினிலே
பெற்றோரும் உற்றோரும்
மகிழ்ந்திட சேவை செய்தாய்
இளம் வயதினிலே சபதம் கொண்டு
களம் புகுந்த இளம் மறவ — மனோகரா!
உன் இலட்சியக் கனவுகள் நினைவாகுமுன்னே
உன் வீரத்தில் துப்பாக்கிக் குண்டு
பாய்ந்ததுவோ ஏனோ!
வீரனே நீ மறைந்தாலும் நீ கொண்ட
இலட்சியம் நிறைவேறும் என்று
விரும்பிடும் உன் மக்கள்
உன் ஆத்ம சாந்திக்கு வேண்டுகிறோம்.

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. குடும்பத்தினர்



கிரிக்கெட்: 15, 17 வயதுப்பிரிவு

# யாழ் இந்து சாதனை

## இரு அணிகளும் சாம்பியன்

## இறுதியாட்டங்களில் இன்னிங்ஸால் வெற்றி!

— அலுவலக விளையாட்டுச் செய்தியாளர் —

யாழ்ப்பாணம், ஜூலை30 யாழ்ப்பாண பாடசாலை அணிகளுக்கிடையேயான கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியின் 15, 17 வயதுப் பிரிவு அணிகள் இரண்டும் சாம்பியனாகி சாதனைபுரிந்துள்ளன

இந்த இரு பிரிவுகளும் இறுதிப் போட்டியில் இன்னிங்ஸால் வென்றது குறிப்பிடத்தக்கது.

கடந்த 18, 19 ஆம் திகதிகளில் நடைபெற்ற 15 வயதுப் பிரிவு இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை இன்னிங்ஸால் தோற்கடித்த யாழ் இந்து அணி சாம்பியனாகியது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் இடம்பெற்ற 17 வயதுக்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான இறுதியாட்டத்தில் யாழ் இந்து அணி, யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் அணியை இன்னிங்ஸால் வென்று சாம்பியனானது.

யாழ் இந்து அணியின் தலைவர் பி பிரபானந்தன் வீழ்த்திய 10 விக்கெட்டுகளும்—

ரி கே புவனேந்திரன், கே எஸ் ரவிக்குமார், பி பிரபானந்தன், எஸ் சுரேஸ் ஆகியோர் திறமையாக ஆடி எடுத்த ஓட்டங்களும் யாழ் இந்து அணியின் வெற்றிக்கு வித்திட்டன.

யாழ்ப்பாணம் சென் பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற இந்த இறுதிப்போட்டியின் முதல் நாள் ஆட்டத்தில் யாழ் இந்து 7 விக்கெட்டுக்களை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது தெரிந்ததே

நேற்றைய ஆட்டம் ஆரம்பமான போது தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய யாழ் இந்து அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 218 ஓட்டங்களைப் பெற்றது

சிறப்பாகத் துடுப்பெடுத்தாடிய ரி கே புவனேந்திரன் கே எஸ். ரவிக்குமார் பி பிரபானந்தன், எஸ் சுரேஸ், பி. ஸ்ரீகணேசன் ஆகியோர் முறையே 58, 41, 33, 31, 17 ஓட்டங்களைப் பெற்றனர்.

ரி அகிலன் 36 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் பி ரவிராஜன் 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும் எஸ். ஜெயசங்கர், எஸ். சஞ்சீவன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



பிரபானந்தன்

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் அணி 92 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்தது

எஸ் சஞ்சீவன் 35 ஓட்டங்களையும், பி ரவிராஜன் எம் அரவிந்தன் ஆகியோர் முறையே 17, 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

சிறப்பாகப் பந்து வீசிய பி. பிரபானந்தன், கே எஸ் ரவிக்குமார் ஆகியோர் முறையே 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும் 25 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு 126 ஓட்டங்களைப் பெற வேண்டிய நிலையில் சென். ஜோன்ஸ் அணி மீண்டும் துடுப்பெடுத்தாடியது

இரண்டாவது இன்னிங்ஸில் இந்த அணி 90 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் கோட்டை விட்டது

எஸ் சுதர்சன் 16 ஓட்டங்களைப் பெற்றார்.

அபாரமாகப் பந்து வீசிய பி பிரபானந்தன் 33 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகளையும் எஸ். திலீபன் 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், கே. எஸ் ரவிக்குமார் ஜெ ஜெயதீபன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் இறுதியில் யாழ் இந்து அணிக்கான சாம்பியன் கேடயத்தை சென். பற்றிக்ஸ் அதிபர் வண. பிதா பிரான்சிஸ் மைக்கல் ஜோசப் வழங்கினார்.

இந்த இறுதியாட்டத்திற்கு திரு ஆர் செல்வரெட்னம், திரு என் எம் பரமேஸ்வரன் ஆகியோர் மத்தியஸ்தம் வகித்தனர்.

இந்தச் சுற்றுப்போட்டிக்கான ஒழுங்குகளை யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கச் செயலாளர் திரு என் சோமசுந்தரம் மேற்கொண்டிருந்தார் (உ-7)

17 வயதுப்பிரிவு உதைபந்தாட்டம்

# சென் சாள்ஸ் சாம்பியன்

## 3-1 கோல்களினால் வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை30 வடமாநிலக் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 17 வயதுக்குட்பட்டோர் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் சாள்ஸ் கல்லூரி சாம்பியனானது

நேற்று மாலை யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதி ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை சென். சாள்ஸ் கல்லூரி அணி 3—1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்தது

இந்தச் சுற்றுப் போட்டியின் எந்த ஆட்டத்திலும் சென். சாள்ஸ் அணி தோல்வியடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய ஆட்டத்திற்கு திரு சண் ஹிட்லர் மத்தியஸ்தம் வகித்தார்

பிரதம கல்வியதிகாரி திரு. க. தங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

வட்டாரக் கல்வியதிகாரி (உடற்கல்வி) திரு வி கணேசலிங்கம் போட்டிக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார் (உ-7)

# அமைச்சரவையில் பெரும் மாற்றங்கள்?

## 'தினரஸ' கூறுகிறது

கொழும்பு ஜூலை 30 அமைச்சரவையில் பெரும் மாற்றங்களைச் செய்ய ஜனாதிபதி எண்ணியிருக்கிறாராம்.

இப்படி சுதந்திரக்கட்சி நாளிதழ் 'தினரஸ' செய்தி வெளியிட்டது.

வீடமைப்பு சம்பந்தமான மாற்றம் ஒன்றைக் கொண்டுவர ஜனாதிபதி அக்கறை காட்டுகின்றார்

மாகாணசபை முறை அமுலுக்குக் கொண்டு வரப்படுவதுடன் இந்த அமைச்சரவை மாற்றங்கள் நடைமுறைக்கு வரலாம்.

குடியகல்வு, குடிவரவு, பிரசா உரிமை ஆகிய துறைகளைக் கவனிக்க இரண்டு அமைச்சர்கள் நியமிக்கப்படுவர்.

ஜனாதிபதி தனது பொறுப்பில் உள்ள ஆறு அமைச்சுக்களில் நான்கை புதிய அமைச்சர்களின் பொறுப்பில் விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாகாணசபைச் சட்ட அமுலுக்குப் பொறுப்பாக ஒரு அமைச்சர் இருப்பார்.

இரண்டு உபஜனாதிபதிகளை நியமிக்கும் ஒரு திட்டத்தையும் ஜனாதிபதி பரிசிலனை செய்து வருகின்றார்.

இப்படி அச் செய்தி கூறுகின்றது. (உ-ஐ-எ)

## உடல்---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்து வெளியே வீசப்பட்டு உடல் சிதறிய நிலையில் இறந்து கிடந்தார்.

இவரது தலைப்பகுதி அடுத்த கொட்டிலுக்குள் பறந்திருந்தபடியால் காயங்களுடன் யாழ் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்

இப்படி அவர் சொன்னார் (இ-10)

## விடுதலை---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மூன்றுக்கு மேற்பட்ட சிறீலங்கா படைகள் கொல்லப்பட்டனர்.

ஓர் இராணுவப் பொறுப்பதிகாரியும்வேறொருவரும் வேறு சிலரும் காயமடைந்துள்ளனர்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org